# இன்றுநள்ளிரவுமணிஒலிக்கமாவீரருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்) கடந்த ஒருவார காலமாக தமிழீழ மக்களால் உணர்வுடனும் எழுச்சியுடனும் அனுஷ்டிக்கப்படும் மாவீரர் வாரத்தின் சிறப்பு நிகழ்வாக இன்று நள்ளிரவு மணிகள் ஒலிக்க மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படவிருக்கிறது.

(2ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 10 இதழ் 295
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26-11-1994

## மாவீரர் துயிலும் இல்ல ஈகைச்சுடரேற்றல் ஒழுங்கு

(யாழ்ப்பாணம்) மாவீரர் நாளின் அதிகாலை 12-01ற்கு மாவீரர் துயிலும் இல்லத்தில் ஈகைச்சுடர் ஏற்றும் நிகழ்வினைச் சிறப்பிக்கும் வகையில் போக்குவரத்து ஒழுங்குகளும், துயிலும் இல்ல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழீழ விடு

(4ம் பக்கம் பார்க்க)

## தலைவர் விசேட உரை புலிகளின் குரல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்) மாவீரர் நாளையொட்டி புலிகளின் குரல் வானொலி இன்று 26-ம் திகதி இரவு 09-00 மணி தொடக்கம் அதிகாலை 12-30 மணிவரை தமது ஒலிபரப்பை நீடித்துள்ளது. அன்றைய தினம் இரவு 11-48 நிமிடத்துக்கு தமிழீழ

(4-ம் பக்கம் பார்க்க)

# அன்று பதவியிலிருந்த அரசு அதிகாரிகள்

# அரசியல் கொலைகளை புலிகள்

# மேல் சுமத்தி தாம் தப்பித்தனர்!

## அரசியல் விமர்சகர்கள் சாடல்

[கொழும்பு]

அரசியல் தலைவர்களும் படைத்தளபதிகளும் கொலைசெய்யப்பட்ட போது அவற்றை விடுதலைப்புலிகளின் மேல் சுமத்திவிட்டு அரசுஅதிகாரிகள் அன்று தம்மைப் பாதுகாத்துக்கொண்டனர்என்று அரசியல் விமர்சகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பொலிஸ் விசாரணைகள் நடைபெறும் போது விசேஷ கமிஷன்கள் நியமிக்க முடியாதென காரணம் கூறிய அதிகாரிகள் அன்று இந்தக்கொலைகளையெல்லாம் விடுதலைப்புலிகளின் மேலேயே சுமத்திவிட்டனர் எனவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இதேவேளையில் முன்னாள் ஜனாதிபதிஆர். பிரேமதாஸா வின் கொலைகுறித்துவிசாரணை செய்வதற்கு பொது முன்னணி அரசினால்விஷேச ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டதுகுறித்து பிரேமதாஸாவின் மகளான திருமதி துலாஞ்சலி ஜெயக்கொடிதிருப்தி தெரிவித்துள்ளார்.

பிரேமதாஸா கொலையுண்ட ஒரு சில மணித்தியாலங்களுக்கு அவர் கொலையுண்ட இடம் முற்று முழுதாகக் கழுவிச் சுத்தமாக்கப்பட்டது குறித்து அப்போது பொலிசாரிடம் வினவியபோது அதற்கு திருப்தியான ஒரு பதில் தமக்குக் கிடைக்கவில்லையெனவும் திருமதி ஜயக்கொடி

(2-ம் பக்கம் பார்க்க)



40-வது அகவை காணும் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வாழ்க பல்லாண்டு! வாழியவே!

## புலிகளின் நடவடிக்கைகள் தமிழகத்தில் அதிகரிக்கலாம்

### மத்திய அரசு உஷார்

(புதுடில்லி) விடுதலைப்புலிகள் தமிழகத்தை தமது பின்புறத் தளமாக பாவிக்கக்கூடிய அறிகுறிகள் தற்போது அதிகரித்து வருவதாக இந்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஸ் பைலட் எச்சரிக்கை செய்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் கருத்து தெரிவிக்கையில், ''விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தமிழகத்தில் எந்த நேரத்திலும் தீவிரமடையக்கூடும். ஆதலால் மத்திய அரசு மிகவும் உஷாராக இருப்பதுடன் தமிழக அரசின் நடவடிக்கைகளையும் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் கூறினார். -வி-ரி

## மாவீரர் பெற்றோர் இன்று கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்) இவ்வாண்டின் மாவீரர் நாளையொட்டிய மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நாள் இன்று நடைபெறவுள்ளது:

இன்று பி. ப. 2 மணியில் இருந்து யாழ். மாவட்டத்தில் வசிக்கும் மாவீரர் பெற்றோர்கள் 13 கௌரவிப்பு நிலையங்களுக்கு அழைத்துக் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

கோட்ட, வட்ட ரீதியாக அமைக்கப்பட்டுள்ள கௌரவிப்பு நிலையங்களில் இந்த கௌரவிப்பு இடம்பெறும்.

வலிகாமம் கோட்டம் யாழ். வட்டத்தில் - யாழ். இந்துக் கல்லூரி, நல்லூர் வட்டத்தில் கனகரெத்தினம் மகாவித்தியாலயம்,

கோப்பாய் வட்டத்தில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, உடுவில் தெல்லி வட்டத்தில் மருதனார்மடம்-இராமநாதன் கல்லூரி, சண்டிலிப்பாய் வட்டத்தில்-

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் முதலீடுசெய்ய வெளிநாட்டவர் தயக்கம்!

(கொழும்பு) இலங்கை புதிய அரசின் பொருளாதாரக் கொள்கையில் விளக்கம் இல்லாததினால் வெளிநாட்டு மூதலீட்டாளர்கள் பலர் இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு தயக்கம் காட்டுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கருத்து தெரி

(4ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ராவின் உறவினர் கடத்தப்பட்டு விடுதலை

(சென்னை) இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் உறவினர் ஒருவர் கடத்தப்பட்டதை அடுத்து ஆந்திராவில் உள்ள பிரதமர் நரசிம்மராவின் இல்லத்தைச் சுற்றி பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் சகோதரரின் மருமகனை நக்ஸலைட்டுகள் கடத்தியமையாலேயே இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் இல்லத்துக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது

கடத்தப்பட்டவரை மீட்பதற்கு ராவ் குடும்பத்தினர் 1 கோடி ரூபாவை பணயத்தொகை தரவேண்டுமென்று மேற்படி கடத்தல்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிந்திக்கிடைத்த செய்திகளின்படி கடத்தப்பட்டவர் விடுவிக்கப்பட்டுள்ளார். -ம-ரி

## "பெண் புலி போராளிகளிடம் ஒரு ஆன்மீகசக்திஇருக்கிறது"

### – இந்திய ருடே வாஸந்தி புகழாரம் –

(லண்டன்) ''உலகில் உள்ள பெண்களை விட இலங்கையின் யாழ்ப்பாணத்திலுள்ள பெண் புலி போராளிகளிடம் ஒருவித ஆன்மீக சக்தி இருப்பதை என்னால் காணமுடிந்தது,''

இவ்வாறு 'இந்திய ருடே' தமிழ் இதழ் ஆசிரியர் திருமதி வாசந்தி பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவிக்கையில், 'நான் உலகின் பல நாடுகளுக்குச் சென்று பெண்களின் இன்றைய நிலைபற்றி அறிந்துள்ளேன். மேல்நாட்டுப் பெண்களைவிட கீழ்நாட்டுப் பெண்களின் நிலை மிகவும்மேலாகவே

(4ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

கணிதம் O/L 94

Credit பெறுபேறடையவும் இவ்வாண்டு கணித பாடத்தில் சித்தியடையவேண்டியவர்களுக்கும் கடைசி 30 மணித்தியால ட்யூட்டல் மூலம் கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc 85, சிவன்கோவிலடி மணல்தறை லேன், திருநெல்வேலி. (சி-1331)


## நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் ஆதரவில், சபைக்குரிய நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் (நீராவியடி) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவரின் குருபூசை இன்று சனிக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு நடைபெறும்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# தமிழருடன் சமாதானம் பேசுவோரே தெற்கில் இன்று தலைவர்கள் : கிறூர்கள்

## — இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் கடந்த கால வரலாற்றை எடுத்துப் பார்த்தால் எந்த சிங்கள தலைவர்களால் தமிழ் மக்கள் கூடுதலாக இம்சிக்கப்படுகிறார்களோ, அல்லது தாக்கப்படுகிறார்களோ அவர்களே அன்று அரசியல் தலைவர்களாக சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்டார்கள். ஆனால் அந்த நிலை முற்றிலும் மாறுபட்டு இன்று எந்த சிங்களத் தலைவர்கள் தமிழருடன் சமாதானம் பேசுகிறார்களோ அவர்களே தெற்கில் அரசியல் தலைவர்களாக சிங்கள மக்களால் தெரிவுசெய்யப்படுகிறார்கள். இதுவே சிறிலங்கா அரசின் அன்றைய நிலையும் இன்றைய நிலையுமாகும்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் யாழ். மாவட்ட நீதிநிர்வாகத் துறையினரால் நடத்தப்பட்ட மாவீரர் தின நாலாவது நாள் நிகழ்வில் கலந்து கொண்டு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி தமிழீழ நீதிமன்ற நீதியாளர் திரு. பூவேந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. இளம்பரிதி தொடர்ந்து உரையாற்றுகையில், இன்றைய சமாதானப் பேச்சுக்கான விழிப்புணர்வை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கியவர்கள் இன்று எம் எல்லோராலும் போற்றிப் பூசிக்கப்படும் இந்த மாவீரர்களேயாவர். எமது வீரர்களின் தியாகம், அவர்களின் கட்டுக்கோப்பு மனஉறுதி ஆகியவைகளே சிங்கள மக்களைப் பணியவைத்தது.

சிறிலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா சமாதானம் பேசுவதற்கு ஏன்முன்வந்தார்? சிங்களமக்கள் சமாதானத்தை வேண்டி அதற்கான ஒரு வாய்ப்பைச் சந்திரிகாவுக்கு ஏற்படுத்தியுள்ளார்கள். இந்த வாய்ப்பை திருமதி சந்திரிகா சரியான வகையில் பயன்படுத்துவாரா? வடபகுதிக்கு எடுத்து வரப்படுவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த இருபத்தி எட்டுப் பொருட்களுக்கான தடையை நீக்கியுள்ளார் ஆனால் பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடையினால் தமிழ் மக்களின் தேசியப்பொருளாதாரம் விரைவாக வளர்ச்சிபெற்றுள்ளது. இந்த நிலை மேலும் தொடருமானால் தமிழீழ பொருண்மியமேம்பாடுமேலும் உயர்ந்துவிடும். இதனால் வெகு விரைவில் தமிழீழம் மலரும். எனவேதான் திருமதிசந்திரிகா சமாதானம் பேசுவதற்கு முன்வந்தார்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் எமதுமக்கள் சிங்கள மக்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். நடுப்பகுதியில் தமிழர் என்கின்ற தகுதியை இழந்திருந்தோம். இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஒரு தலைசிறந்த மதிநுட்பமுடைய நிதானமான தேசியத் தலைவரின் வழிநடத்தலில் சர்வதேசமும் வியக்கத்தக்க வகையில் ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்தி வருகின்றோம். எமது பிரச்சனைகளை திருமதி சந்திரிகாவால் முழுமையாகத் தீர்த்துவைக்க முடியாது. எமது பலத்தினால் தான்இதைத்தீர்த்துக்கொள்ள முடியும். எனவேதான் நாம் எமது பலத்தை மேலும் உயர்த்திக்கொள்ளவேண்டும் என்றும் அவர் தனதுரையில் தெரிவித்தார்,

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் உரையாற்றுகையில், தேசிய விடுதலைப் போராட்டமானது இன்று சர்வதேச அங்கீகாரத்தைப் பெறக்கூடிய அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது. எமது வரலாற்று எதிரியான சிங்கள அரசுடன் மட்டும் நாம் எமது போராட்டத்தை நடத்தவில்லை. எமது போராட்டத்தை பல வகையிலும் நசுக்குவதற்கு கங்கணம் கட்டி நிற்கும் இந்திய அரசையும் எதிர்க்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

எமது பிரதேசங்கள் சிங்கள அரசினால் திட்டமிட்டு சுவீகரிக்கப்பட்டு வருகிறது. எமது மக்கள் பல்லாயிரக்கணக்கானோர் சிறிலங்கா பாதுகாப்புப் படையினரால் துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள். எமது இளைஞர்கள் சித்திரவதைக் கூடங்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். திருமதி சந்திரிகா சிறிலங்கா பிரதமராக இருந்தபொழுது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தன்னிடம் போதிய அதிகாரம் இல்லை என்று கூறி வந்தார். இதன் காரணமாக மக்கள் ஆதரவு அவருக்கு அமோகமாகக் கிடைத்தது. சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் பெற்ற ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் இராணுவம் குவிக்கப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து பயங்கர யுத்த தளபாடங்கள் சேகரிக்கப்படுகிறது. பேச்சுக்கள்பற்றி அரசு மௌனம் சாதிக்கிறது.

நாம் ஒரு பலம் பொருந்திய தேசியத் தலைவரின் வழிகாட்டலில் எமது போராட்டத்தை நடத்தி வருகிறோம். எமது விடுதலைப் போராட்டத்தை எந்த அரசும் சரிவர மதிப்பிடத் தவறினால் அது அவர்களின் மடமைத்தனம் என்றுதான் கொள்ள வேண்டும் எனறும் அவர் தமது உரையில் தெரிவித்தார்.

(162-சி)

அன்று
(1-ம் பக்கத்தொடர்ச்சி]

சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரேமதாஸா கொலை குறித்து விசாரணைகளை மேற்கொண்ட இரகசிய பொலிசார் அவ்வப்போது தமது அறிக்கைகளை சமர்ப்பித்த போதும் அது குறித்து பிரேமதாசா குடும்பத்தினர் ஆறுதல் கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது,

பிரேமதாசா கொலை குறித்து விசாரணைக் கமிஷன் ஒன்றை மேற்கொள்ளுமாறு முன்னுள்அரசிடம்தான் பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்த போதும் அதைஅரசு எதுவித கவனமும் செலுத்தவில்லை எனவும் திருமதி ஜெயக்கொடி மேலும் தெரிவித்தார். (இ-ரி[

இன்று நள்ளிரவு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழின வரலாற்றின் புதிய பரிணாம வளர்ச்சிக்கு வழி சமைத்து இன்னுயிரை ஈந்த தற்கொடையாளர்களான மாவீரர்களுக்கு தமிழீழமக்கள் அனைவரும் இன்று நள்ளிரவ வணக்கம் செய்து அஞ்சலி செலுத்துவர்,

இன்று நள்ளிரவு 12 மணிக்கு தமிழீழமெங்கும் சமகாலத்தில் அனைத்து ஆலய, தேவாலய மணிகளும் இரண்டு நிமிடங்கள் ஒலி எழுப்பும், அந்த நேரத்தில் அனைவரும் அமைதி வணக்கம் செலுத்துவர்.

நினைவொலி எழுப்பப்படும் போது வீதியால் பயணம் செய்பவர்கள் உட்பட அனைவரும் அந்த அந்த இடத்திலே நின்று அமைதி வணக்கம் செய்வர். -ரி


## ஒளி வீசி வாழியவே

தமிழ் மண்ணை மீட்கவென்றே
தரணியிலே உதித்த உந்தன்
தளராத உறுதி கண்டு
தருக்குற்றோம் தமிழர்நாம்

அமிழ்தான எம் தலைவா
அகங்குளிர வாழ்த்துகிறோம்
ஒரு நூறு ஆண்டுகள் நீ
ஒளிவீசி வாழியவே.

சனசக்தி சனசமூக நிலையம்.
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.



வட மாகாண
பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவு நிறுவனங்களின் சமாசம்

## மாவீரர்கள் நினைவாக

(அ) அஞ்சலிகள் போதாது அணிஅணியாய் அவர் வழியில்
துஞ்சாது போராடத் துணி.
(ஆ) தாயகத்தோடு சங்கமமேயாகிவிட்ட
தூயவர்கள் மாவீரர் துதி.
(இ) தன்னுயிரில் மேலாக தாயகத்தை நேசித்த
மன்னவர்கள் மாவீரர் மதி.
(ஈ) அன்னையர்க்கு ஆயுதப் போராகுமோ என்றன்று
சொன்னவரைப் பழித்தாள் எம்சோதரி.
(உ) எஞ்சியுள்ள பணியனைத்தும் எடுத்தலே மாவீரர்
அஞ்சலிகள் ஆகும் அறி.
(ஊ) வேங்கை அணியல்லாமல் வேறெவரும் இல்லையென்று
ஓங்கட்டும் இங்கிருந்தோர் குரல்.
(எ) பெற்றவரைப் போன்றே மாவீரர் பெற்றோரை
பற்றோடு பேணுதலே பணி.
(ஏ) பிறந்தாலும் மாவீரர் போலப் பிற, வாழ்ந்திங்கு
இறந்தாலும் அவர் போல இற.

### அறிவித்தல்

எமது உரிமைகளை வென்றெடுக்க, தமது உயிர்களைத் தற்கொடையாக்கிய மாவீரர் நாள் நவம்பர் 27இல் எமது நிறுவனங்கள் விற்பனை நடவடிக்கைகளை நிறுத்திக் கோட்ட மட்ட மாவீரர் நிகழ்வுகளில் அங்கத்தவர், பணியாளர், மகளிர் குழுக்கள் கலந்து கொண்டு மாவீரர் மாண்பினை நினைவிற் கொள்வோமாக.

தலைவர்,
வட மாகாண பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் சமாசம்.

(எ 4520)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-11-26 சனி இரவு

08-01 மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி இ. இராஜேஸ்வரன் எழுதிய 'மாவீரர் இலட்சியங்கள் மாண்டுவிடாது'
08-25 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 சித்திரம்—ந. கிருஷ்ணா எழுதிய ''மங்களத்திருநாள்''
09-00 மணிமுதல் 12-30 மணி வரை மாவீரர்தின சுடரேற்றும் வைபவத்தையொட்டி விசேட ஒலிபரப்பு.
12-30 மணிக்கு எமது விசேட ஒலிபரப்பு நிறைவு பெறும்.

1994—11—27 ஞாயிறு காலை

07-02 மாவீர வணக்கம்.
07-13 களத்தில் மலர்ந்தவை.
07-30 செய்திகள்.
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி - இ. இராஜேஸ்வரன் எழுதிய ''சுவடுகளில் தடம்பதிப்போம்''
08-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## பாரிவழி வந்த பிரபாகரனே! வாழிய நீ!

நாங்கள் உன்னால் நிமிர்ந்து நிற்கிறோம்
நாமே உலகின் தனியினம் என்று...
எழுந்து நிற்கிறோம்! துணிந்து நிற்கிறோம்!
பூங்காற்றும் புயலும் உன்னைப் புகழ்கிறது!
பூவும் தளிரும் கொடியும் செடியுமுன்னைப்
பைந்தமிழாற் பாடித் துதிக்கிறது!
தேன்கூட்டில் பிறந்த தீந்தமிழ்த் தாய்பெற்ற
தேசத்தின் முத்தே! எம்மினத்தின் சொத்தே!
மான்கூட்டமாக... எம்மினம் மருண்டு ஓடியவேளை
மறப்புலியாகி எழுந்த மன்னவனே! வாழி!

எல்லாளனும் ராஜராஜனும் உனக்கு ஆசியுரை வழங்குவர்!
வல்லாளனும் வன்னியனும் சங்கிலியனும் உனக்கு
வாழ்த்துப்பா பாடி நிற்பர்... எமது நாட்டை
இல்லாமல் அழிக்க ஏக்கம் கொண்டுவரும்
எத்தர்கள் இனியுமிங்கு இருக்கமுடியாதென்று
எழுந்துபோர்ப் புயலொன்றை இயக்கும் தலைவனே!
பல்லாண்டு காலமாய் நாமிழந்த பைந்தமிழ்ப் பூமியிதை
பாரினில் சிறந்தபூமி யாக்கப் படை நடாத்தும்
பாரிவழிவந்த பிரபாகரனே! வாழியநீ! வாழியவே!
புல்லோடு பூண்டும் புலியாகி எழுந்தேச மிதில்...
''செல்''லோ குண்டு சேர்ந்து வந்தாலும்
சிரித்துநாம் நிற்போம்! நீயிருக்கு மட்டும்!

— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

### மணிவாக்கு

தெய்வத்தையே எதிர்ப்பவன் வேறு எவரிடத்தில் பிரார்த்தனை செய்ய முடியும்.

## நமது நோக்கு

### சுப்பற்றை கொல்லைக்கு அப்பாலும்...!

''குடா நாட்டுக்கு வெளியேயுள்ள வளங்கள் முளுமையான பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் விதத்தில், மக்கள் குடியேற்றத்திற்கு ஏற்ற திட. டங்கள் முக்கியப்படுத்தப் படவேண்டும்'' எனபொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் வி. செம்பியன் ஆய்வுப் பட்டறையில் நிகழ்த்திய உரையிற் குறிப்பிட்டார்.

இனவாத யுத்தத்தால் எம்மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடூரம் மிக்க யுத்தத்தின் வடுக்களை, வறுமையை நிரந்தரமாக அகற்ற வேண்டும் என்ற உயர் இலட்சியக் கண்ணோட்டத்தில் அவரது உரை அமைந்திருந்தது.

''சுற்றிச் சுற்றிச் சுப்பற்றை கொல்லைக்குள்ளேயே!'' என்ற மொழிக்கிணங்க எமது சிந்தனை குறுகிய வட்டத்திற்குள் இருந்துவிடலாமா?

வளங்கள் குன்றிவரும் குடாநாட்டிற்கு அப்பாலும் சென்று குடியேறி வளம் காண வேண்டிய காலம் அரும்பி வருகிறது.

இங்கு மாத்திரமல்ல - உலகின் பல்வேறு பகுதிகளிலும், மக்கள்தொகை பெருகி வரும்போது புலம் பெயர்ந்து வளம்கண்ட கதைகளையே வரலாற்றிற் படிக்கிறோம்.

இன்றும்கூட - உலகிலேயே முஸ்லீம்கள் அதிகமாக வாழும் இந்தோனேசியாவில் நடப்பதென்ன?

ஆயிரத்திற்கு மேற்பட்ட தீவுகளைக் கொண்ட பரந்த நாட்டின் அறுபது சத வீத மக்கள் எட்டு சத வீதப் பிரதேசமான ஜாவாவிலேயே நெருங்கி வாழ்கிறார்கள்.

எனவேதான் - உலக வங்கியின் உதவியுடன் ஏனைய தீவுகளுக்கு மக்களை நகர்த்தக்கூடிய திட்டங்களைச் செயற்படுத்துகிறார்கள்.

பிற தீவுகளில் கைத்தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக மின்சார வசதி போன்ற உட்கட்டுமானப் பணிகள் நடக்கின்றன.

உதாரணமாக - சுமாத்திராப் பகுதியில் நீர் மின்சாரத் திட்டத்திற்காக உலக வங்கி உதவியுள்ளது.

எனவே - இங்கு குடாநாட்டு மக்களை வன்னிப் பிரதேசற்திற்குக் குடிபெயரச் செய்ய வேண்டுமானுல், அப்பகுதியிலே உட்கட்டுமானப் பணிகள் விரைவாகச் செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்!

# தேசிய தலைவரின்

## வழி காட்டலில் அணிதிரள்வோம்

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ தேசிய நாளாகிய மாவீரர் நாள்—நவம்பர் 27ம் நாள் எமது தேசிய அபிலாசைகள் உள்ளக்கனலாகக் குமுறி எழ, வெங்களமாடி வித்தாகிவிட்ட மாவீரர்களை நினைவு கூர்ந்து, தமிழீழ மக்கள் அனைவரும் ஒருங்கிணையும் நாளாகும்'' சிமெந்துகட்டிட தொழிலாளர் சங்க யாழ். மாவட்ட கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

நீண்டகாலமாக அந்நியருக்கு அடிமைப்பட்டிருந்தது எமது தாயகம், எமது பண்பாட்டில் சீர்குலைவு, எமது மொழியில் வேற்று மொழிக் கலப்பு. எமது பொருண்மியம் தங்குநிலைகொண்டமை. எமது தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் ஆகியவை எமது தாயகத்தில் இறைமையை இழப்பின் விளைவுகள். ''இழந்த இறைமையை மீட்போம் தமிழீழ தாயகத்திற்குப் போராடுவோம்'' என சூளுரைத்து நிற்கிறோம். எமது தேசியத் தலைவரது வழிகாட்டலில், எமது விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப் படுகிறது.

தமிழீழத்தவன் பிறழ்வுபடாது, தொன்மையைப் புரிந்துகொண்டு, இன்றைய அறிவியல் வளர்ச்சியை உள்ளாக்கி முன்னேக்கிய பயணத்தை மேற்கொள்கிறான். எத்தனை இடர்களை சிறிலங்கா பேரினவாதம் இழைத்தாலும் அவற்றை உடைத்து முன்னேறுகிறான் என முழு அகிலமும் வியந்துநிற்கிறது. இந்த வெற்றிகளுக்கெல்லாம் அடிநாதமாக இருந்து, வீரத்தின் ஈகத்தின் உச்சிக்குச்சென்றவர்கள் மாவீரர்கள். மாவீரர்கள் எமது மக்களின் மீது எமது தாயகத்தின் மீது ஆழ்ந்த நேசங்கொண்டிருந்தவர்கள். எமது சுதந்திரமும், கௌரவமும் பாதுகாக்கப்படவேண்டியவை என செயற்பட்டவர்கள்.

மாவீரர் வாரத்தில், மாவீரரை நினைவுகூர்ந்து, மாவீரர் நிகழ்வுகளில் பங்கு கொள்வோம். மாவீரர் ஆலயங்களுக்கு அணி, அணியாகச் சென்று மலர்சாத்தி அஞ்சலிசெலுத்துவோம். நவம்பர் 26ம் நாள் நள்ளிரவு வேளை தாண்டி புதிய நாள் உதிக்கும் 12 மணி ஒரு செக்கனுக்கு ஆலயமணிகள் எங்கும் ஒலிக்கட்டும்,

''துயில் கொள்ளும் எமது புதல்வர்களே! உங்கள் மீது ஆணையாக, மீளவும் எமதுவிடுதலைப்போராட்டத்தில்எம்மை அர்ப்பணிக்கிறோம்'' என மௌனமாக உறுதி எடுப்போம். 12 மணி 2 நிமிடத்திற்கு, இல்லங்கள், பாடசாலைகள், ஆலயங்கள், அலுவலகங்கள்எங்கும் மாவீரர்சுடரேற்றுவோம். நவம்பர் 27ம் நாள் நடைபெறவுள்ள மாவீரர் நினைவுப் பொதுக்கூட்டத்தில் அணிதிரண்டு கலந்துகொள்வோம். (சி)

## மங்காத புகழோங்க தமிழீழம் காக்கின்றான்

என்னதவம் செய்தன யாம்; ஏங்கிநிற்கும் போதினிலே
தன்னலத்தை தகர்த்தெறிந்த தலைவனென எழுந்து வந்தான்
பன்னரிய திறமையினுல் பாரிலொரு பிரமனென
கன்மனத்தா ரழிந்திடவே காலனென களம்புகுந்தான்

அஞ்ஞானம் அகற்றிவிட்டு அனைவரையும் அணைத்து நிற்கும்
மெஞ்ஞான ஒளியுடனே மேதினியைக் காக்கவென
விஞ்ஞான நுட்பமெலாம் விரைந்துணர்ந்த செயற்றிறத்தை

எஞ்ஞான்றும் கைக்கொடுத்து எத்தர்களைச் சாய்த்து நின்றான்
கற்பிட்டிக் கடலினிலே கடலரசன் மூச்சிழக்க
முற்கூட்டி வகுத்தெடுத்த திட்டத்தைச் செயற்படுத்தும்
அர்ப்பணிப்பினுலுயர்ந்த கரும்புலிகள் தியாகமெல்லாம்
நற்றவத்தினுல்விளையும் நந்தலைவன் வியூகமன்றோ

சிங்கத்தை எதிரெதிரே சந்திக்கும் திண்மையினுல்
வெங்களத்துச் சிங்கங்கள் அடிவயிறு கலக்கிவிட்டான்
அங்கங்கள் சிலிர்க்கவைக்கும் வியூகங்கள் அமைத்துலகில்
மங்காத புகழோங்கத் தமிழீழம் காக்கின்றான்.

— மாரீசன் பிள்ளை

### பலதும் பத்தும்

**கந்தப்பிள்ளை!**

இவர்..யாழ்ப்பாணத்து நல்லூரில்... இராச வைத்தியரான பரமானந்தரின் மகன். தமிழறிஞர் கூழங்கைத் தம்பிரானிடம் தமிழ் கற்றதோடு, போர்த்துக்கேயம், உலாந்தா, ஆங்கிலம் போன்ற மொழிகளையும் அறிந்தவர்.

சந்திரகாச நாடகம், இராமவிலாசம், கண்டி நாடகம், ஏரோது நாடகம், சம்நீக்கியார் நாடகம் போன்ற இருபத்தியொரு நாடகங்களை எழுதியவர்.

அதுமாத்திரமல்ல - புகழ்பெற்ற வைத்திய பரம்பரையில் வந்த இவர் பல வைத்திய நூல்களை வசன நடையில் எழுதியவர்.

அதுசரி... இவரது இன்னேர் சிறப்பு என்ன தெரியுமோ?...ஆறுமுகநாவலரின் தந்தை இவர்தான்...!

—மயூரன்

### கொள்ளை

(கொழும்பு)

களுத்துறைப்பகுதியில்வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்குள் இரவுநேரத்தில் ஆயுதபாணிகளாக சென்ற கோஷ்டி ஒன்று அங்குள்ள நகைகள், பணம் உட்பட பெறுபதி வாய்ந்த பொருட்களை கொள்ளையிட்டதுடன் வர்த்தகரின்காரிலேயே தப்பிச் சென்று விட்டதாக களுத்துறை பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.

களவாடப்பட்ட வர்த்தகரின் காரையும் கொள்ளைக் கோஷ்டியையும் கண்டுபிடிக்கும் முயற்சியில் விசேட பொலிஸ் கோஷ்டி ஒன்று ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



## ஆண்டு பல்லாண்டு வாழ்க!

இன்றுஎம் ஈழத் தமிழர் தலைவனுய்
எழுந்தனை பிரபாவுன் எழுச்சி
தொன்றுதொட் டெமது தொடர்புறு மறத்தின்
தோற்றுவா யானதோர் புரட்சி
அன்றுமே இல்லா என்றுமே வாரா
ஆற்றலின் முழுமையாம் வளர்ச்சி
ஒன்றுமே ஒவ்வா உறுதியின் உயர்ச்சி
உலகத் தமிழின மகிழ்ச்சி
சென்றுசென் றெங்குமே திகைப்புற வைக்குமுன்
சேனையின் தற்கொடை முயற்சி
நின்றுநின் றிங்கவர் நிகழ்த்திய போர்த்திறன்
நீள்நிலம் கண்டதோர் அதிர்ச்சி
வென்றெழ நின்றிடும் மாட்சியின் வியப்பில்
வெருவலர் கொண்டனர் வெருட்சி
குன்றென நிமிர்ந்து எம்மவர் ஒருவர்க்(கு)
உற்றிடும் கொடுமையைக் கண்டு
முன்புறச் சென்று மோதிடும் மான
முதிர்ச்சியின் முகட்டினில் நின்றாய்
அன்புறு கரனே! ஆற்றலின் வடிவே!
ஆண்டுபல் லாண்டுநீ வாழ்க!

— முருகனடியான்

★

## காலத்தலைவனே! வாழிநீ!

சிங்கள மாமலை எங்களைத் தாக்கிடச்
செங்களம் சென்றவனே! — உயர்
தங்கக மாகவே எந்திரு நாட்டினை
ஆக்கிட நின்றவனே!

பொங்கிடு போரணி வென்றிடத் தாஞெரு
புதுப்புறம் தந்தவனே — எழில்
தங்கமா முயிரினைத் தந்தவர் நினைவினில்
நித்தமும் வெந்தவனே!

ஆற்றலை யாபிரம் போற்றிட நடையிடும்
பிரபாகர வேந்தே! — வெறும்
வயதில்லை தமிழுக்கு; உனக்கும் அதுவே
வாழி நீ காலத்தேவா!

நாற்தசம் கண்டநீ வேற்படையாலொரு
காவியந் தீட்டிடுவாய் — அதில்
காற்றெழும் விடிவில்நீ ஏற்றிடும் கொடியுடன்
முடிவொன்று குறித்திடுவாய்!

— இயல்வாணன்

★

## மங்காப் புகழோடு வாழ்க

தங்கத் தமிழீழத் தலைவா — என்றும்
தலைகுனியாத எம்புதல்வா
எங்கும் பெயர்பொறித்த தனயா — தமிழர்
இன்னல் களையவந்த மைந்தா
பொங்கும் பொலிவோடு அகிலம் — தினம்
போற்ற நூறாண்டு வாழ்க
மங்காப் புகழோடு வாழ்க — மக்கள்
மனத்தில் நிலைத்தென்றும் வாழ்க.

— மனோன்மணி நடராசா

## இராசி பலன்

**26 - 11 - 1994**

சனிக்கிழமை

**(தமிழுக்குகார்த்திகை10)**

அட்டமி மாலை 7-34 வரை, மகம் பி. ப. 2-42 வரை, அமிர்தசித்த யோகம், கரி நாள், இராகுகாலம் காலை 9-12 முதல் 10-42 வரை. சுப வேளை 3-12 முதல் 4-42வரை.

மேடம்: கல்நெஞ்சம், தொழில் வெறுப்பு, முயற்சி தோல்வி.

இடபம்: உறவினர் துன்பம், மனப் போராட்டம், அலைச்சல்.

மிதுனம்: வாக்குவாதம், குடும்ப சுகம், பயணநன்மை.

கடகம்: குடும்ப வேற்றுமை, வீண்விரயம், கடின வாக்கு.

சிங்கம்: மாமியார்பெருமை, தனவரவு, தெய்வ தரிசனம்.

கன்னி: பிறர் குற்றம், காரிய தாமதம், யோசனை.

துலாம்: வருவாய்மேன்மை, சகோதர அறிவுரை, நற்செய்தி.

விருச்சிகம்: விவேகமான செயல், கல்வியால் பெருமை, தானதர்மம்.

தனுசு: தொழில் நஷ்டம், வழித் தொல்லை, மனச்சுமை.

மகரம்: அதிகாரிகள் சினம், வேலைக்கஷ்டம், பயஉணர்வு.

கும்பம்: செல்வந்தர் நட்பு, சுபகாரியம், மனமகிழ்ச்சி.

மீனம்: பிறருக்கு உதவுதல், புத்திரர் பெருமை, கடன் வாங்குதல்.

ஜோஸ்யர்

### யாருடையது?

சடந்த 23ம் திகதி யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத் தெருவில் மூக்குக் கண்ணுடியும், கூடும் திரு. றொபின் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுச்கொள்ளலாம்.

பொழியும் மழை நீரை சேமித்தே — செல்வம்
கொழிக்க நாம் வாழ்ந்திடுவோம்.

# வரவு செலவுத்திட்டம் நிறைவேறியது

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின்இடைக்கால வரவு-செலவுத்திட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் 58 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது.

வரவுசெலவுத் திட்டத்தை ஆதரித்து 130 உறுப்பினர்களும் எதிர்த்து 72 உறுப்பினர்களும் வாக்களித்தளித்தார்கள்.

இந்த வரவு-செலவுத்திட்டத்தில் 1995-ம் ஆண்டுமுதல் மூன்று மாதங்களுக்கு 4779 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வி-இ

ராஜீவ் கொலைவழக்கில் சாட்சியமளிக்க:

# ஒருதமிழரும் 7பொலிஸாரும் தமிழகம் அனுப்பப்பட்டனர்!

(கொழும்பு)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இந்திய நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்காக இலங்கைத்தமிழர் ஒருவரும், ஏழு பொலிஸாரும் இலங்கை அரசாங்கத்தின் மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஏ. எவ் பி செய்திகள் தெரிவித்துள்ளன.

கடந்த புதன்கிழமை இவர்கள் தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ராஜீவ்காந்தி கொலையின் முக்கிய சந்தேக நபர்களின் திருமணங்களை இந்த இலங்கைத் தமிழர் பதிவு செய்தவர் கூறப்பட்டது.

1993ம் ஆண்டு முன்னுள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்டபோது பொலிஸார்நடத்திய விசாரணையில்இந்த நபர் சாட்சியளிக்கவேண்டிய சந்தர்ப்பம்ஏற்பட்டதாம். (இ)

# அமைச்சர் கதிர்காமர் இந்தியா பயணம்

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அயல் நாடுகளுடனுன உறவுகளை பலப்படுத்தும் முகமாக வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் இந்தியாவுக்கும், பங்களாதேஷுக்கும் தமது முதலாவது உத்தியோக பூர்வ விஜயத்தை அடுத்த மாதம் 4-ம் திகதி வரை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியாவுக்கும், பங்களாதேஷுக்கும் விஜயம் மேற்கொள்ளும் அமைச்சர் அடுத்த மாதம் 4-ம் திகதி முதல் 6ம் திகதி வரை பங்களாதேஷ் டாக்கா நகரிலும் 7ம் திகதி முதல் 10ம் திகதி வரை புதுடில்லியிலும் அந்தந்த நாட்டுப்பிரதமர்களுடனும், வெளிவிவகார அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்துவார்.

வி-இ

★ பால்டிக் கடலில்

# உயிருக்காக போராடிய 41 ஈழத்தமிழர்கள் மீட்பு!

]ஸ்ரொக்ஹோம்]

பால்டிக் கடலில் உயிருக்காகபோராடிக்கொண்டிருந்த 41 இலங்கைத் தமிழர் அடங்கிய மூன்று படகுகளை ரஷ்ய சுவீடன் கப்பல்கள் மீட்டுள்ளன.

பால்டிக் கடலில் உறைபனிப் பகுதிக்குள் இந்தமூன்று படகுகளும் சிக்குண்டு தத்தளித்துக்கொண்டிருப்பதை ரஷ்ய சரக்குக் கப்பல் ஒன்று அவதானித்து அருகிலிருந்த சுவீடன் அரசுக்கு தகவல் கொடுத்தது. இதையடுத்து சுவீடன் ரஷ்யக்கப்பல்கள் இந்த மூன்று படகுகளிலுமிருந்த 41 இலங்கையரையும் காப்பாற்றி சுவீடனுக்குக் கொண்டு சென்றனர்.

மேற்படி மூன்று படகுகளிலும் இருந்த இலங்கைத் தமிழர்களின் பெரும்பாலானேர் பெண்களும்சிறுவர்களுமென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

# "லட்சியபுருஷர்களை நினைவுகூருவோம்"

– மாவீரர்தின செய்தி –

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளையொட்டி பொது அமைப்புகள் மற்றும் சங்கங்கள் அறிக்கைகளை வெளியிட்டுவருகின்றன.

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

எம். நெஞ்சங்களில் சுதந்திரத்தீயை வார்க்கும் நாட்களே மாவீரரின் புனிதவார நாட்கள். இம்மாவீரர்கள் கிஞ்சித்தும் தனது நலம் தனது குடும்பநலம் என நோக்காது தேசநலன் மக்கள்நலன் நோக்கியே தம்வாழ்வை அர்ப்பணித் இறுதியில் தமது இன்னுயிரையே எம் ஒவ்வொருவருக்காகவும் ஆகுதியாகின்னர்.

இவர்கள் எம் நெஞ்சங்களிலும், இல்லங்களிலும் இருத்தி வணங்கப்பட வேண்டியவர்கள். இவர்களது உயிர் ஈகை பூசிக்கப்படவேண்டும். இம் மாவீரர்கள் ஒவ்வொருவரினது வீரமரணமும் எமது தேசிய மண்மீட்புப் போராட்டத்தை முன்நோக்கிநகர்த்தி செல்கின்றது.

யாழ். ஆங்கில மருத்துவ வர்த்தகர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மாவீரர்களுடைய வீரத்தையும், தியாகத்தையும், துணிவையும் கண்டு உலகநாடுகள் மூக்கின்மேல் கைவைத்து வியந்து நிற்கிறார்கள், தமிழ் மக்களையும், தமிழ் மண்ணையும் காப்பதற்காக புறப்பட்டவர்கள் மாவீரர்கள். எங்கள் ஒளிமயமான வாழ்வுக்காக தங்களைத் தியாகம் செய்த மாவீரர்களை காலம் காலமாக நினைவு கூறி இவ் புனித தினங்களை சிறப்பாகக் கொண்டாடுமாறு சகல தமிழீழ மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்துமத குரு பீடாதிபதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் விடுத்துள்ள மாவீரர் நாள் செய்தியில் தெரிக்கப்பட்டுள்ளதாவது: நமது தேசதின் விடிவிற்காய் தமது இன்னுயிர்களை தியாகம் செய்த லட்சிய புருஷர்களை நன்றியுணர்வுட நினைவுகூர்ந்து போற்றுவோம்.

இவர்கள் தமிழீழமெங்கும் மூச்சுக் காற்றாய் இருப்பார்கள். மக்கள் மனங்களில் தியாக தெய்வங்களாய் பூஜிக்கப்படுவார்கள், தமிழீழ வரலாற்று நாயகர்களாய் வாழ்வார்கள்.

மாவீரச் செல்வங்களின் லட்சியக் கனவுகள் பலிக்க நவம்பர் 26ம் திகதி ஓங்கார மணியோசையை 2 நிமிட நேரம் எழுப்பும்படி சகல இந்துமத ஆலயங்களின் நிர்வாகங்களையும் குருமார்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம், -ரி

## மாவீரர் துயில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தலைப்புலிகள் யாழ் மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மாவீரர் கல்லறைகளிற்கும், நினைவுக்கற்களிற்கும் அஞ்சலி செலுத்துவதற்கு போராளிகளும், பொதுமக்களும் இன்று 26-ந் திகதி இரவு 8 மணி வரை அனுமதிக்கப்படுவர். அதன்பின் நினைவுக்கற்கள், கல்லறைகள் கொண்ட தொகுதிக்குள் மாவீரர்களின் பெற்றோர்கள் கல்லறைகளிற்கும் நினைவுக்கற்களிற்கும் அஞ்சலி செலுத்துவதற்கான நிலைக்கு வந்தபின்னரே இரவு 11-30 மணிக்குப் பின்பு போராளிகளும், பொதுமக்களும் துயிலும் இல்லத்தினுள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

துயிலும் இல்லத்திற்கு வணக்கம் செலுத்த வருவோர் வசதி கருதி இராச பாதையில் இரு புறங்களிலும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களும், மோட்டார் வாகன தடுப்பு நிலையங்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது எனவே சகலரும் அதனுள் தங்கள் வாகனங்களையும், துவிச்சக்கர வண்டிகளையும் நிறுத்திக் கொள்ளுமாறும் வாகனங்களும் மோட்டார் சைக்கிள்களும் அவை நிறுத்தம்படும்வீதிகளை ஒருவழிப் பாதையாக மட்டும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவீரர் பெற்றோர்கள், அவர்களிற்கென ஒதுக்கப்பட்ட பாதையினூடாக துயிலும் இல்லத்தை வந்தடைந்து தங்கள் தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளிற்கும் நினைவு கற்களிற்கும் சென்றடையக்கூடிய வகையில் துயிலும் இல்ல ஒழுங்கமைப்பாளர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். அவர்கள் மேலதிக விபரங்களை துயிலும் இல்ல நுழைவாயிலில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் பெற்றோரை ஏற்றி இறக்கும் வாகன ஒழுங்கமைப்பு செய்வதற்காக செல்வபுரம் ச. ச. நிலையத்தில் அலுவலகம் செயற்படும். பெற்றோர்கள் பலாலி வீதி ஊடாக கணேசலிங்கம் (அன்சார்) வீதி வழியாக அழைத்துச் செல்லப்படுவார்கள்.

எனவே மேற்படிஒழுங்குகளை சகலரும் கடைப்பிடித்து மாவீரர் நாள் நிகழ்வினை புனிதத்தினைப் பேணி ஒத்துழைக்குமாறு யாழ் மாவட்ட அரசியல் துறையினுல் விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -ரி

## தலைவர் விசேட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசியத்தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்க புலிகளின் குரல் வானொலியில் மாவீரர் தினத்தையொட்டி உரையாற்றவுள்ளார். தொடர்ந்து 12-00 மணிக்கு மாவீரர் நினைவை அனுஷ்டிப்பதற்கானமணி ஒலி எழுப்பப்படும். 12.02 ற்கு மாவீரர் துயிலுமில்லப்பாடல் இடம்பெறும். அதிகாலை 12-30 ற்கு விசேட ஒலிபரப்பு நிறைவு அடையும்.

விசேட நிகழ்ச்சிகளாக மாவீரர் நாள் சிறப்பு நிகழ்ச்சி, இசையரங்கம், சவிச்சித்திரம், வில்லிசை என்பன இடம்பெறும். (ரி)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தை ஒட்டி யாழ், பல்கலைக்கழக இந்து மன்றம், ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளுக்கு ஒழுங்கு செய்துள்ளது. (ரி)

# மாவீரர் வாரம் நேற்று 5வது நாளாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் வாரம் நேற்று ஐந்தாவது நாளாக அனுஷ்டிக்கப்பட்டது. நேற்றுக்காலை 9 மணிக்கு தேசியக் காடிகள் ஏற்றப்பட்ட இடங்களில் மக்கள் மாவீரர்களுக்காக மலரஞ்சலி செலுத்தி செலுத்தினர்,

கோட்ட மற்றும் வட்டவை மட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மாவீர ஆலயங்களிலும் மக்கள் நேரில் சென்று தமது அஞ்சலி செலுத்தினர்கள்

மாவீரர் வாரத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் தினமும் பஜனையும், பிரார்த்தனைகளும் இடம்பெற்று வருகின்றன.

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றன.

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மதகுருமார்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மாவீரர் நாளையொட்டி ஆங்காங்கே இடம்பெறும் நினைவுரைகள் மற்றும் கலை நிகழ்வுகளில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றுகின்றனர். நேற்றுக்காலையில் இருந்து மாலைவரை மழை பெய்து கொண்டிருந்த போதும் வழமை போல மாவீரர் வார நிகழ்வுகள் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (162-ரி)

# யாழ். நகர் நோக்கி ஷெல் தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாம்பகுதியிலிருந்துநேற்றுப் பிற்பகல் 4-30 மணிக்கு யாழ். நகர் கரையோரப் பகுதியை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல் நடாத்தினுர்கள்.

இந்த ஷெல் தாக்குதல் நடைபெறுவதற்கு சில நிமிடங்கள் முன்பாக பலாலி பகுதியிலிருந்து வந்த ஹெலி ஒன்று மண்டைதீவில் தரை இறங்கிய பின்பே ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. வி-ரி)

## மாவீரர் பெற்றோர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, சங்கானை வட்டத்தில் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி, தென்மராட்சிக் கோட்டம் கைதடி வட்டத்தில்-கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், சாவகச்சேரி வட்டத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கொடிகாமம் பளை வட்டத்தில் - உசன் இராமநாதன் கல்லூரி, வடமராட்சிக் கோட்டம் பருத்தித்துறை வட்டத்தில் - புற்றளை மகா வித்தியாலயம், கரவெட்டி வட்டத்தில் - கரவெட்டி ஞானசிரியார் வித்தியாலயம், உடுப்பிட்டி வட்டத்தில்-நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், தீவகக் கோட்டம்-யாழ். இந்து மகளிர் கல்லூரி.

ஆகிய இடங்களில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நடைபெறும்.

இன்று மாலை 4 மணிக்கு முன்னதாக யாழ். மாவட்டத்தில் வாக்கும் சகல மாவீரர் பெற்றோர்களையும் தத்தமது வட்டங்களின் கௌரவிப்பு நிலையங்களுக்கு வந்துசேருமாறு அன்போடும், ஆதரதோடும் யாழ், மாவட்ட அரசியல்துறையினர் அழைப்பு விடுக்கின்றனர். -ரி

## பெண் புலி

1ம் பக்கத் தொடர்ச்சி)

கீழ்நாட்டுப் பெண்களிடம் ஒருவித ஆன்மீகத்தி இருக்கின்றது.

இந்த ஆன்மீக சக்தி குறிப்பாக இலங்கை யாழ்ப்பாணத்து பெண்புலிகளிடம் நிறைந்திருக்கின்றது. அவர்களை அங்கு நான் சந்தித்தபோது, அவர்கள் ஒரு காளியின் சொருபமாக எனக்குத் தென்பட்டார்கள். அது ஒருவித ஆன்மீகசக்தி என்றே கூற வேண்டும். இதனுல்தான் அவர்கள் தமது சொந்தக் கால்களில் நிற்கச் செய்கின்றது என்று அவர் கூறினுர்.

வி-ரி

## வெளிநாட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கையில்

நாம் எமது பணத்தை இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்பு இலங்கையின் புதிய அரசு எந்தவிதமான பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருக்கின்றது என்பதை விளக்கமாக வெளியிடவேண்டும்.

புதிய அரசின் பொருளாதாரக் கொள்கை விளக்கமில்லாததினுல் கடந்த செப்டம்பர் மாதம் முதல் முதலீடுகள் எதையும் செய்யாமல் காத்துக்கொண்டிருக்கிறோம். அரசு உடனடியாக தனது பொருளாதாரக் கொள்கை பற்றி சரியான விளக்கத்தை வெளியிடாவிட்டால் நாம் அண்டை நாடுகளான இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளை நாடிச் செல்லவேண்டி ஏற்படலாம் என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள் -வி-ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B